


மதுரை மாவட்டம் பாலமேட்டில் நடைபெற்ற புகழ்பெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் சிறப்பாக விளையாடிய சிறந்த காளைக்கு முதல் பரிசாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக டிராக்ரையும், சிறந்த மாடுபிடி வீரருக்கு முதல் பரிசாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பாக சொகுசு காரையும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் சங்கீதா ஆகியோர் முன்னிலையில் வழங்கினார். உடன் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன் மற்றும் அதிகாரிகள், விழா குழுவினர், கழகத்தினர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாநகராட்சிப் பகுதியில்

# போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## பொதுப்பணித்துறை - நெடுஞ்சாலைகள் - சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, ஜன.19-

பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (17.01.2025) திருவண்ணாமலை மாநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநில தடகள சங்க துணைத் தலைவர் மருத்துவர் எ.வ.வே. கம்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மரு.சுதாகர், மாமன்ற தலைவர் திருமதி.நிர்மலா வேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை மாநகராட்சியில் அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலுக்கு வருகைத்தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை தொடர்ந்து மாநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் பொருட்டு குழு அமைக்கப்பட்டு, தொடர் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுவருகிறது. அதன்படி, இன்றைய தினம் நடைபெற்ற மூன்றாவது குழுக்கூட்டத்தில் திருவண்ணாமலை மாநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்பட்டுத்தும் பொருட்டு, மாவட்ட நிர்வாகம், காவல்துறை, மாநகராட்சி நிர்வாகம் மற்றும் திருவண்ணாமலை மாநகரில் உள்ள அனைத்து ஓட்டல்கள் உரிமையாளர்கள் சங்கம், வியாபாரிகள் சங்கம், ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம், தனியார் பேருந்து இயக்குபவர்கள் சங்கம், தாலுக்கா அனைத்து வியாபாரிகள் சங்கம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் உள்ளிட்ட சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையிலான ஆலோசனைக் கூட்டத்தில் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், திருவண்ணாமலை மாநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த, கீழ்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோவிலை சுற்றியுள்ள மாட வீதிகளில் நான்கு சக்கர வாகனங்கள் செல்வதற்கு தடை செய்யப்பட்டும், இரவு நேரங்களில் சரக்கு வாகனங்கள் மட்டும் செல்வதற்கு அனுமதிக்க முடிவு செய்யப்பட்டது.

கோவிலை சுற்றியுள்ள மாடவீதி தெருக்களை யொட்டி வசிக்கும் உள்ளூர் வாசிகள் வாகனங்கள் சென்று வர ஏதுவாக, வட்டார போக்குவரத்து அலுவலர் மூலமாக, தனியாக அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்களது வாகனங்கள் மட்டும் செல்ல அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் பொருட்டு, திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையத்திலிருந்து செல்லும் பேருந்துகள் மணலூர்பேட்டை, தண்டராம்பட்டு செல்வதற்கு - அசோக் பில்லர் மத்தலாங்குளத்தெரு - பெரியார் சிலை - வாட்டர் டேங்க் - காந்தி நகர் - அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எடப்பாளையம் மணலூர் பேட்டை ரிங்ரோடு - சண்முகா கல்லூரி - அங்காளம்மன் கோவில் U Turn எடுத்து மணலூர்பேட்டை செல்ல வேண்டும், தாமரை நகர் வழியாக தண்டராம்பட்டு செல்ல வேண்டும் ,

தண்டராம்பட்டு மற்றும் மணலூர் பேட்டையிலிருந்து திருவண்ணாமலை மத்திய பேருந்து நிலையம் வரும் பேருந்துகள் - அங்காளம்மன் கோவில் - கல்நகர் (ஆதில்பிரியாணி) - ஆடுத்தொட்டிதெரு - திருவள்ளுவர்சிலை விஜயாமால் சந்திப்பு -காந்தி நகர் வாட்டர் டேங்க் - பெரியார் சிலை - மத்தலாங்குளத் தெரு அசோக்பில்லர் வழியாக பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் எனவும்,

செங்கம் மற்றும் பெங்களூரு, திருப்பத்தூர் செல்லும் பேருந்துகள் - மத்திய பேருந்து நிலையம் - அசோக்பில்லர் - மத்தலாங்குளத்தெரு பெரியார்சிலை - வாட்டர் டேங்க் - காந்தி நகர் - விஜயாமால் சந்திப்பு - திருவள்ளுவர் சிலை - அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி-எடப்பாளையம்-வெளிவட்ட சாலை - அய்யம்பாளையம் சந்திப்பு வழியாக இயக்கப்படவேண்டும் எனவும், (Town Bus - அசோக்பில்லர் - பெரியார்சிலை - வாட்டர் டேங்க்- காந்தி நகர் - விஜயாமால் - திருவள்ளுவர் சிலை - அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி - எடப்பாளையம் சந்திப்பு - மணலூர்பேட்டை ரிங்ரோடு சண்முகா கலைக் கல்லூரி - அங்காளம்மன் கோவில் - காமராஜர்சிலை - அக்னி தீர்த்தம் - ரமணாஸ்ரம் - அரசு கலைக் கல்லூரி - மேற்கு காவல்நிலையம் வழியாக இயக்கப்படவேண்டும் எனவும்)

செங்கத்திலிருந்து திருவண்ணாமலை வரும் பேருந்துகள் - தண்டராம்பட்டு ரிங்ரோடு - மணலூர்பேட்டை ரிங்ரோடு - எடப்பாளையம் சந்திப்பு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி - திருவள்ளுவர் சிலை - விஜயாமால் சந்திப்பு - காந்தி நகர் -வாட்டர் டேங்க் - பெரியார் சிலை - மத்தலாங்குளத்தெரு - அசோக்பில்லர் வழியாக இயக்கப்படவேண்டும் எனவும் (Town Bus - அரசு கலைக்கல்லூரி- ரமணாஸ்ரம் அக்னிதீர்த்தம்- காமராஜர் சிலை - கல்நகர் (ஆதில்பிரியாணி) ஆடுத்தொட்டிதெரு - திருவள்ளுவர் சிலை - விஜயாமால் சந்திப்பு - காந்திநகர் - வாட்டர்டேங்க் - பெரியார் சிலை - மத்தாலங்குளத்தெரு - அசோக்பில்லர் வழியாகவும்) இயக்கப்படவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை மாநகரில் ஆன்மீக சுற்றுலா வாகனங்கள் நிறுத்துமிடங்கள் (வேலூர்-அவலூர்பேட்டை சாலையிலிருந்து வரும் ஆன்மீக சுற்றுலா வாகனங்கள் அண்ணா ஆர்ச் ஈசான்ய மைதானத்திலும், திண்டிவனம் - வேட்டவலம் சாலையிலிருந்து வரும் ஆன்மீக சுற்றுலா வாகனங்கள் இரயில்வே ஸ்டேசன், காந்தி நகர் மைதானம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரே உள்ள மைதானத்தில் நிறுத்தவும், திருக்கோவிலூர் சாலையிலிருந்து வரும் ஆன்மீக சுற்றுலா வாகனங்கள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரே உள்ள மைதானத்தில் நிறுத்தவும், மணலூர்பேட்டை, தண்டராம்பட்டு சாலையிலிருந்து வரும் ஆன்மீக சுற்றுலா வாகனங்கள் SR ஸ்டீல் கம்பெனி எதிரில் உள்ள தற்காலிக பேருந்து நிலையத்தில் நிறுத்தவும், செங்கம் சாலையிலிருந்து வரும் ஆன்மீக சுற்றுலா வாகனங்கள் சந்தைமேடு மைதானம், அத்தியேந்தல் தற்காலிக பேருந்து நிலையத்தில் நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

திருவண்ணாமலை மாநகரில் ஆட்டோக்கள் சென்றுவர அனுமதிக்கப்படும் வழித்தடங்கள் : காந்திநகரிலிருந்து அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு செல்லும் ஆட்டோக்கள் பாலாஜி நர்சிங் ஹோம் - சன்னதி தெரு - ராஜம் மருத்துவமணை வழியாக இடது புறம் திரும்பி அய்யங்குளம் அக்ரஹார தெருவில் பயணிகளை இறக்கிவிட்டு - ரங்கா லாட்ஜ் தெருவழியாக திரும்பி செல்ல வேண்டும் (One Way) அல்லது ராஜம் மருத்துவமனை அடைந்து வலதுபுறம் திரும்பி கோபல் பிள்ளையார் தெருவில் பயணிகளை இறக்கிவிட்டு அண்ணா சிலை வழியாக செல்ல வேண்டும். (One Way)

ரங்கா லாட்ஜ் சந்திப்பிலிருந்து ராஜம் மருத்துவமணைக்கு செல்ல அனுமதியில்லை.

சன்னதி தெருவிலிருந்து (சக்கர குளம்) - ராஜம் மருத்துவமணை - கட்டபொம்மன் தெருவரை (அண்ணாமலையார் ஹோட்டல் ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

எஸ்.பி.ஐ. வங்கி (கொசமடத்தெரு) சந்திப்பிலிருந்து ராஜம் மருத்துவமணைக்கு ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

அய்யங்குளத்தெரு சந்திப்பிலிருந்து ராஜம் மருத்துவமணை வரை ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

காந்தி சிலையிலிருந்து தேரடி வீதி கடலைகடை சந்திப்பு கற்பக விநாயகர் கோவில் வரை ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

பழைய மீனாட்சி தியேட்டர் சந்திப்பிலிருந்து ஆட்டோக்கள் அய்யங்குளம் தெரு வழியாக சுப்பிரமணி சுவாமி கோவில் அருகில் பயணிகளை இறக்கிவிட்டு (சர்கார் கிட்சன் செண்டர்) கரிகாலன் தெருவழியாக திரும்பி செல்ல வேண்டும். (One Way)

பெரிய மசூதி மற்றும் கரிகாலன் சந்திப்பிலிருந்து அய்யங்குளம் தெரு, சுப்பிர மணிய சுவாமி கோவிலுக்கு ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

அசோக்பில்லர், ரவுண்டானாவிலிருந்து சின்னகடை தெருவழியாக பூதநாராயணன் கோவில் சந்திப்பு வரை ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

காமராஜர் சிலையிலிருந்து திருமஞ்சன கோபுரத்தெரு - கற்பகவிநாயகர் கோவில் வரை ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

வடஒத்தவாடைத்தெரு, தென்ஒத்தவாடைத்தெரு, அம்மனியம்மன் கோபுரத்தெரு, ஆவாரங்காட்டுத்தெரு, ஆணைக்கட்டித்தெரு ஆகிய தெருக்களில் ஆட்டோக்கள் செல்ல அனுமதியில்லை.

மேலும், திருவண்ணாமலை நகரில் செயல்படும் அனைத்து பள்ளிகளுக்கும் பௌர்ணமி நாட்களில் விடுமுறை அளித்து அதற்கு ஈடாக வேறொரு நாட்களில் பள்ளி செயல்பட நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டது.

தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் 15 ஆகியவற்றில் பக்தர்கள் கார்பார்க்கிங் மற்றும் இதர வசதிகளை அறிந்து கொள்ளும் வகையில் வழிகாட்டி பாதகைகள் நான்கு மொழிகளில் (தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம்) வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

திருவண்ணாமலை நகருக்குள் செயல்படும் வங்கிகள் தங்களுக்கென சொந்தமாக கார் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்த பார்க்கிங் வசதிகள் செய்து கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

திருவண்ணாமலை நகருக்குள் அதிவேகமாக மற்றும் அதிக லோடுடன் செல்லும் வாகனங்கள் உரிமம் ரத்து செய்யப்பட்டு பறிமுதல் செய்திட நடவடிக்கை மேற் கொள்ள முடிவு செய்யப்பட்டது.

பகல் நேரம் மட்டுமின்றி இரவு நேரங்களிலும் காவல்துறையினர் நகரின் முக்கிய இடங்களில் பணிபுரிவது அவசியம் எனவும், அதற்கேற்ப காவலர்களை பணியில் ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டது..

அண்ணா ஆர்ச் மற்றும் ஆதில் பிரியாணி கடை கார்னர் ஆகிய இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றிட வருவாய்துறை மற்றும் மாநகராட்சி நிர்வாகம் மூலமாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

திருவண்ணாமலை வட்டார போக்குவரத்து எல்லைக்குட்படாத ஆட்டோக்கள் திருவண்ணாமலை மாநகரில் இயங்குவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

திருவண்ணாமலை மாநகர பகுதிகளில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் வருகின்ற பிப்ரவரி 01, 2025 முதல் நடைமுறைப்படுத்த வேண்டுமென பொதுப்பணித்துறை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவுரை வழங்கினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ராம்பிரதீபன், மாமன்ற உறுப்பினர்கள், திருவண்ணாமலை மாநகரில் உள்ள அனைத்து ஓட்டல்கள் உரிமையாளர்கள் சங்கம், வியாபாரிகள் சங்கம், துாய்மை அருணை, ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கம், தனியார் பேருந்து இயக்குபவர்கள் சங்கம், தாலுக்கா அனைத்து வியாபாரிகள் சங்கம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் உள்ளிட்ட சங்கங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் அரசுதுறைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

### கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்

# கோட்டை அப்பாஸ் சகோதரர் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 19-

கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் சகோதரர் அபு (எ) சையது அபதாஹிர் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-


கழக மூத்த முன்னோடி மறைந்த மு.சுலைமான் அவர்களின் மூத்த மகனும் கோவை மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ் அவர்களின் அண்ணனுமாகிய அபு (எ) சையது அபுதாஹிர் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும் - கோவை மாநகர் மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# பொங்கட்டும் உள்ளம்!

பொங்கல் செழிக்கட்டும்! புத்தமுது உண்டிடுவோம்
எங்கும் திராவிடம் வெல்லட்டும் - பங்கம்
தமிழருக்கு வந்ததால் போராட்டக்களம் காண்போம்
அமிழ்து காண்போம் வெற்றி அறிந்து
பொங்கட்டும் உள்ளம் புதியநற் சிந்தனைகள்
தங்கட்டும் இன்பம் தளைக்கட்டும் - செங்கதிர்
ஆட்சி தளபதியால் ஏழையர் துன்பமகற்றி
மாட்சி பெருகட்டும் மலிந்து.
ஊரெங்கும் கண்ட தொழிற்பூங்கா வெற்றிபெற்று
பார்புகழ் முன்னேற்றம் பெருகியது - நீருற்றாய்
பொங்கும் வளமையெல்லாம் பூரிப்பால் ஏழையர்
தங்கும் தளபதியின் ஆட்சி.
எல்லார்க்கும் எல்லாம் கிடைத்து மகிழ்வுற்றார்
நல்லவர் ஆட்சி நடப்பதாம் -பொல்லாதார்
தடுத்தாலும் எங்கள் தளபதியின் நல்லாட்சி
எடுப்பாய் இருக்கிறது இங்கு.
பெண்கல்வி பெற்றதால் பெருமை தமிழ்நாட்டிற்கு
எண்ணிலா ஊக்குவித்தார் ஆட்சியாளர்-மண்ணகத்தில்
எல்லாம் பெருமை தளபதிக்கு தந்தாரே
நல்லறம் வந்ததே நாளும்.
எண்ணத் தெளிவால் இயங்கும் உழைப்பினால்
பண்ணால் தமிழ்மொழி பற்றினால் - மண்ணில்
தளபதியார் முந்துகிறார் மற்றவரை! நன்கு
உளமார வாழ்த்துவோம் யாம்.



- கவிஞர்
**நெல்லை குமார சுப்பிரமணியம்**

# மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மதுரை, ஜன. 19-

மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நாளை (20.01.2025- திங்கள்கிழமை) மாலை 05.30 மணி அளவில் பசுமலை கோபால்சாமி திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் மா.ஒச்சுபாலு தலைமையில் நடைபெற இருப்பதால் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை வருகை குறித்து.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. முத்துராமலிங்கம்
### சனவரி 19 (2019)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.**

**இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் – மாவட்ட கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பூபாலன்
### சனவரி 19 (2006)



**இளம் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**கிளைக் கழக பிரதிநிதி, நகர பொருளாளர் என பொறுப்பு வகித்து தொடர்ந்து மூன்று முறை மதுராந்தகம் நகரச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.**

**மதுராந்தகம் கூட்டுறவு பால் சொசைட்டி தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**